| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | மாவட்டம் : | இராமநாதபுரம் | காலம்: | 29/05/2024 | முதல் | 02/06/2024 |
| | அறிக்கை எண் : | 043/ 2024 | வெளியீட்டு நாள்: | | 02/06/2024 | |

## இராமநாதபுரம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (23.5.2024 முதல் 27.05.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 02-06-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/05 | 24/05 | 25/05 | 26/05 | 27/05 | தேதி | நாள்-1 29/05 | நாள்-2 30/05 | நாள்-3 31/05 | நாள்-4 01/06 | நாள்-5 02/06 |
| 1.0 | 0.4 | 0.1 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 2 | 0 | 4 | 0 | 0 |
| 35 | 34 | 36 | 34 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 35 | 36 | 36 | 35 | 36 |
| 26 | 25 | 25 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 26 | 26 | 25 | 26 |
| 6 | 5 | 8 | 8 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 6 | 8 | 5 | 6 |
| 80 | 78 | 77 | 75 | 67 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 60 | 60 | 70 | 70 |
| 76 | 77 | 72 | 76 | 80 | | 40 | 40 | 50 | 50 | 50 |
| 6 | 9 | 8 | 8 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 18 | 18 | 14 | 20 | 28 |
| தெற்கு | தெற்கு | தெற்கு | தென் மேற்கு | தெற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தெற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 29 மற்றும் 31 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 25° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 14 முதல் 28 கி.மீ வேகத்தில், தென்மேற்கு மற்றும் தெற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு 31 மே - 06 ஜூன் 2024):**

**மழைப்பொழிவு :**

31-05-2024 - 06-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

31-05-2024 - 06-06-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது இயல்பானது முதல் இயல்பை விட சற்று குறைந்து காணப்படும்.34° செல்சியஸ் முதல் 38° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

31-05-2024 - 06-06-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 14 முதல் 28 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

29 மே முதல் 31 மே வரையிலான காலகட்டத்தில் மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது 2- 3° செல்சியஸ் செல்சியஸ் அதிகரித்து காணப்படும். 30° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : கம்பு, பருத்தி, கால்நடை.**

**கம்பு:**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலை மானாவாரியில் கம்பு விதைக்க ஏற்ற தருணமாகும். கோ7, கோ9, X7, ICMV 221, த.வே.ப.க கம்பு கலப்பினம் கோ 9 போன்றவை மானாவாரிக்கு ஏற்ற இரகங்களாகும்.

கம்பு விதைகளை 2சதம் பொட்டாசியம் குளோரைடு அல்லது 3சதம் சோடியம் குளோரைடில் 16 மணிநேரம் ஊறவைத்து பின் 5 மணி நேரம் நிழலில் உலர்த்துவதால் விதையின் முளைப்புத்திறன் அதிகரிக்கும்.

அனைத்து கம்பு ரகத்திற்கும் 45 X 15 செ.மீ. இடைவெளி விட்டு இரண்டு (கம்பு) வரிசைக்கு ஒரு வரிசை ஊடுபயிராக பயறுவகை பயிரையும் விதைக்க வேண்டும்.

**பருத்தி:**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் பருத்தியில் இலைப்பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது.

இதன் பூச்சிகள் இலைகளின் சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் சுருக்கங்களுடன் காணப்படும். நுனி மொட்டுகளை தாக்குவதால் ஒழுங்கற்ற நுனிகளுடன் காணப்படும். இலையின் அடிப்புறம் வெள்ளை நிறத்தில் பளபளப்பாக காணப்படும்.

ஒரு ஏக்கருக்கு 100 மி.லி என்ற அளவில் இமிடாகுளோப்ரிட் பூச்சிக்கொல்லி மருந்தினை தெளிக்கலாம்.

**காால்நடை:**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் எல்லா வயது ஆடுகளையும் தாக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன.

மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும். இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி துள்ளி விழும்.

இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரியன் உதித்து ஒரு மணி நேரம் கழித்து ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும்.